# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,634 — 1959 දෙසැම්බර් 2 වැනි සිකුරාදා—2.1.1959

11,634 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு தை மாதம் 2 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## விலைக் கட்டளைகள்

விலைக் கட்டளை இலக்கம் : R./16/1958. மீன் கருவாடும் இறால் கருவாடும்.

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினாலும் அச்சட்டத்தின் 3 (2) ம் பிரிவினாலும், எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு இரத்தினபுரி மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு), மத்தியாஸ் ஸ்ரீவன் ஜிளிட்டஸ் குணவர்தனா ஆகிய நான் இக்கட்டளையால் :—

(1) 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 10 ந் திகதியைக்கொண்ட 11,612 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 5 ந் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட R./15/1958 இலக்கமுள்ள உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் முதலாம் அட்டவணையின் 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளை நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலையாக விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக் கொண்ட மீன் கருவாட்டையும், இறால் கருவாட்டையும் இந்த விலைக்குக் கூடுதலாக நேரொத்த 1 ஆம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(3) இதனோடிருக்கும் இரண்டாம் அட்டவணையின் 3 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர இருத்தல் ஒன்றின் சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்டுள்ள வர்ணனையைக் கொண்ட மீன் கருவாட்டையும் இறால் கருவாட்டையும் இந்த விலைக்குக் கூடுதலாக நேரொத்த 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் விற்றலாகாது.

(4) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது ஒரு மொத்த அந்தரைக் கொண்ட தொகையில் அல்லது அதிற் கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படும் என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(ஆ) ஒரு அந்தருக்குக் குறைந்த எத்தொகையான மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ பாவிப்புக்காக அல்லது உபயோகத்துக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(இ) " மொத்த வியாபாரி ஒருவர் " என்பதன் பொருள் மீன் கருவாட்டையோ அல்லது இறால் கருவாட்டையோ மொத்த விற்பனை செய்பவரைக் குறிப்பதாகும்.

(ஈ) " மொத்த வியாபாரியின் " ஆகக்கூடிய மொத்த விலை எல்லா மொத்த விற்பனைகளைக் குறிக்கும்.

(உ) " ஆகக்கூடிய சில்லறை விலை " என்பது எல்லாச் சில்லறை விற்பனைகளையும் குறிக்கும்.

(ஏ) " காய்ந்த மீன் " என்பது " மீன் கருவாட்டையே " குறிக்கும் என்பதாம்.

(5) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், எவராவது குறித்த முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் விபரித்துள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டை வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், குறித்த முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும், இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் விவரித்துள்ள வர்ணனையைக்கொண்ட மீன் கருவாட்டை அல்லது இறால் கருவாட்டைத் தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்வாகனத்தில், குறித்த முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் இரண்டாம் அட்டவணையில் 2 ம் பத்தியிலும் விவரித்துள்ள அப்பொருட்களுக்கு அவ்விடப்பரப்பில் இக்களையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றை பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது அவோர்டு போஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 2 ம் பத்தியில் விபரித்துள்ள மீன் கருவாட்டை அல்லது இறுல் கருவாட்டை மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும், குறித்த இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியில் விவரித்துள்ள மீன்கருவாட்டை அல்லது இறுல் கருவாட்டைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும், அப்பொருட்களை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட பொருளின் வர்ணனை ;

(இ) விற்ற பொருளின் மொத்த, நிகர நிறை ;

(ஈ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை ;

(உ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா, அல்லது சில்லறை விற்பனையா என்பது.

(9) குறித்த முதலாம் அட்டவணையின் 2 ம் பத்தியினும், இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும் விவரித்துள்ள மீன் கருவாடும், இறுல் கருவாடும் விற்கப்படும் இடத்து, முதலாம் அட்டவணையின் 3 ம் பத்தியிலும், இரண்டாம் அட்டவணையின் 2 ம் பத்தியிலும், குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் உறை அல்லது கொள்கலம் எதாவது, உபயோகப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளில் முதலாம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா, பொம்பிலி, நெத்தலி, இறுல் கருவாடு முதலியவை தவிர்ந்த மற்றைய எந்த மீன் கருவாடோ எவ்விதமாக வெனினும் விற்கப்படின் அவைகளின் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 10 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும் ;

(11) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் கும்பளா கொள்கலங்களில் எவ்வித மாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக் குறைந்தது கழிவாக 25 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(12) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் பொம்பிலி கொள்கலங்களில் எவ்வித மாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 8 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(13) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் நெத்தலி கொள்கலங்களில் எவ் விதமாகவோ விற்கப்படின் அதன் விற்பனை விலை, மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 20 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(14) இக்கட்டளையால் இதனோடிருக்கும் அட்டவணைகளின் 2 ம் பத்தியில் விவரிக்கப்பட்டிருக்கும் புற ஓடற்ற இறுல் கருவாடு அல்லது புற ஓடுள்ள இறுல் கருவாடு கொள்கலங்களில் விற்கப்படின் அதன் விற்பனை விலை மொத்த நிறையிலிருந்து ஒவ்வொரு கொள்கலத்துக்கும் ஆகக்குறைந்தது கழிவாக 15 இறுத்தல் குறைத்துக் கணக்கிடப்படும்.

(15) இக்கட்டளையின் நோக்கத்துக்காக " நிகர " என்பது மீன் கருவாட்டின் அல்லது இறுல் கருவாட்டின் கழிவு அல்லது வெறும் நிறை குறைந்த மொத்த நிறையாகும்.

1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 27 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு இரத்தினபுரிக் கச்சேரியில் கையொப்பம் இடப்பட்டது.

எம். எல். சீ. குணவர்தன,
உணவு விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), இரத்தினபுரி மாவட்டம்.

## முதலாவது அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| (1) (அ) இரத்தினபுரி நகராண்மைக் கழக எல்லை, (ஆ) பள்ளபத்து (கவர்கிரிய வாசம நீங்கலாக) குக்குள் கோறளையில், (இ) குருவித்தை கோறளையில் உள்ள உடபத்து, கிராம விதானைப் பகுதிகளான (இறற்ற, கிலிமலை தெற்கு, கிலிமலை வடக்கு, மற்றும் குடாவ கிராம விதானைப் பகுதிகள் நீங்கலாக) காந்தனையும் மற்றும் களத்துவாவ கிழக்கும் | அறக்குளா தலையில்லாமல் .. | 117 50 |
| | அறக்குளா தலையுடன் .. | 99 00 |
| | கட்டா தலையில்லாமல் .. | 87 00 |
| | முழுக் கட்டா .. .. | 67 00 |
| | அஞ்சீலா தலையுடன் .. | 61 00 |
| | அஞ்சீலா தலையில்லாமல் .. | 65 00 |
| | பாரை தலையில்லாமல் .. | 97 00 |
| | பாரை தலையுடன் .. | 79 00 |
| | கொடுவா தலையில்லாமல் .. | 87 00 |
| | கொடுவா தலையுடன் .. | 63 81 |
| | சூரை .. .. | 87 00 |
| | தொண்டன் .. .. | 67 00 |
| | கும்பளா .. .. | 29 50 |
| | பொம்பிலி .. .. | 79 00 |
| | நெத்தலி .. .. | 75 00 |
| | ஓடற்ற இறுல் கருவாடு .. | 117 50 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 93 00 |

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக் கூடிய மொத்த விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| (2) குருவித்தை கோறளையில் உள்ள பள்ளபத்து (களத்துவாவ கிராமப் பகுதி நீங்கலாக) மெதபத்து (கரந்தானை கிராமப் பகுதி நீங்கலாக) | அறக்குளா தலையில்லாமல் .. | 117 25 |
| | அறக்குளா தலையுடன் .. | 98 75 |
| | கட்டா தலையில்லாமல் .. | 86 75 |
| | முழுக்கட்டா .. .. | 66 75 |
| | அஞ்சீலா தலையுடன் .. | 60 75 |
| | அஞ்சீலா தலையில்லாமல் .. | 64 75 |
| | பாரை தலையில்லாமல் .. | 96 75 |
| | பாரை தலையுடன் .. | 78 75 |
| | கொடுவா தலையில்லாமல் .. | 86 75 |
| | கொடுவா தலையுடன் .. | 63 56 |
| | சூரை .. .. | 86 75 |
| | தொண்டன் .. .. | 66 75 |
| | கும்பளா .. .. | 29 25 |
| | பொம்பிலி .. .. | 78 75 |
| | நெத்தலி .. .. | 74 75 |
| | ஓடற்ற இருல் கருவாடு .. | 117 25 |
| | ஓடுள்ள இருல் கருவாடு .. | 92 75 |
| (3) (அ) நவதுன் கோறளையிலுள்ள உடபத்து, மெடபத்து, மற்றும் பள்ளபத்து, (ஆ)குக்குள் கோறளையில் உள்ள மெதபத்து | அறக்குளா தலையில்லாமல் .. | 117 65 |
| | அறக்குளா தலையுடன் .. | 99 15 |
| | கட்டா தலையில்லாமல் .. | 87 15 |
| | முழுக்கட்டா .. .. | 67 15 |
| | அஞ்சீலா தலையுடன் .. | 61 15 |
| | அஞ்சீலா தலையில்லாமல் .. | 65 15 |
| | பாரை தலையில்லாமல் .. | 97 15 |
| | பாரை தலையுடன் .. | 79 15 |
| | கொடுவா தலையில்லாமல் .. | 87 15 |
| | கொடுவா தலையுடன் .. | 63 96 |
| | சூரை .. .. | 87 15 |
| | தொண்டன் .. .. | 67 15 |
| | கும்பளா .. .. | 29 65 |
| | பொம்பிலி .. .. | 79 15 |
| | நெத்தலி .. .. | 75 15 |
| | ஓடற்ற இருல் கருவாடு .. | 117 65 |
| | ஓடுள்ள இருல் கருவாடு .. | 93 15 |
| (4) (அ) பலாங்கொடை நகராண்மைக்கழக எல்லை, (ஆ) இரக்குவானை பட்டின சபை எல்லை, (இ) குருவித்தைக் கோறளையில் உள்ள கிராம விதானைப் பகுதிகளான இறற்ஞை, கிலிமலை வடக்கு, கிலிமலை தெற்கு மற்றும் குடாவ, (ஈ) கடவத்தை மெட கோறளையிலுள்ள கெலபற்ற பலாத்த, கெல உடபலாத்த (கல் தோட்ட வாசம நீங்கலாக) மற்றும் உடவேகம்பத்து, (உ) அட்டகலான் கோறளையிலுள்ள பனில பத்து, மெடபத்து, மற்றும் பள்ளபெத்த கிராமப் விதானைப் பகுதி, (ஊ) குக்குள் கோறளையிலுள்ள உடபத்து மற்றும் கவரகிரிய வாசம | அறக்குளா தலையில்லாமல் .. | 117 75 |
| | அறக்குளா தலையுடன் .. | 99 25 |
| | கட்டா தலையில்லாமல் .. | 87 25 |
| | முழுக்கட்டா .. .. | 67 25 |
| | அஞ்சீலா தலையுடன் .. | 61 25 |
| | அஞ்சீலா தலையில்லாமல் .. | 65 25 |
| | பாரை தலையில்லாமல் .. | 97 25 |
| | பாரை தலையுடன் .. | 79 25 |
| | கொடுவா தலையில்லாமல் .. | 87 25 |
| | கொடுவா தலையுடன் .. | 64 06 |
| | சூரை .. .. | 87 25 |
| | தொண்டன் .. | 67 25 |
| | கும்பளா .. .. | 29 75 |
| | பொம்பிலி .. .. | 79 25 |
| | நெத்தலி .. .. | 75 25 |
| | ஓடற்ற இருல் கருவாடு .. | 117 75 |
| | ஓடுள்ள இருல் கருவாடு .. | 93 25 |
| (5) (அ) கொலன்ன கோறளையிலுள்ள கொலன்கம் பத்து மற்றும் தியபொத்தகம் பத்து, (ஆ) கடவத்தை கோறளையிலுள்ள தல்பித்த கம்பத்து, (இ) அட்டகலான் கோறளையிலுள்ள தேபத்து (பள்ள பத்து கிராம விதானைப் பகுதி நீங்கலாக), (ஈ) மெத கோறளையிலுள்ள கலதோட்ட வாசம | அறக்குளா தலையில்லாமல் .. | 118 00 |
| | அறக்குளா தலையுடன் .. | 99 50 |
| | கட்டா தலையில்லாமல் .. | 87 50 |
| | முழுக் கட்டா .. | 67 50 |
| | அஞ்சீலா தலையுடன் .. | 61 50 |
| | அஞ்சீலா தலையில்லாமல் .. | 65 50 |
| | பாரை தலையில்லாமல் .. | 97 50 |
| | பாரை தலையுடன் .. | 79 50 |
| | கொடுவா தலையில்லாமல் .. | 87 50 |
| | கொடுவா தலையுடன் .. | 64 31 |
| | சூரை .. .. | 87 50 |
| | தொண்டன் .. .. | 67 50 |
| | கும்பளா .. .. | 30 00 |
| | பொம்பிலி .. .. | 79 50 |
| | நெத்தலி .. .. | 75 50 |
| | ஓடற்ற இருல் கருவாடு .. | 118 00 |
| | ஓடுள்ள இருல் கருவாடு .. | 93 50 |

## இரண்டாவது அட்டவணை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>விபரம் | பத்தி 3<br>நிகர இருத்தல் ஒன்றின் ஆகக் கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| (1) (அ) இரத்தினபுரி, நகராண்மைக் கழக எல்லை, (ஆ) பள்ள பத்து (கவரகிரிய வாசம நீங்கலாக) குக்குள் கோறளையில், (இ) குருவித்தை கோறளையில உள்ள உடபத்து, கிராம விதானைப் பகுதிகளான (இறற்ஞ, கிலிமலே தெற்கு, கிலிமலே வடக்கு, மற்றும் குடாவ கிராம விதானைப் பகுதிகள் நீங்கலாக), கரந்தனையும் மற்றும் களத்துவாவ கிழக்கும் | அறக்குளா .. .. | 1 25 |
| | கட்டா .. .. | 0 89 |
| | அஞ்சீலா .. .. | 0 72 |
| | பாரை .. .. | 1 02 |
| | கொடுவா .. .. | 0 87 |
| | சூரை .. .. | 0 97 |
| | தொண்டன் .. .. | 0 72 |
| | கும்பளா .. .. | 0 32 |
| | பொம்பிலி .. .. | 0 92 |
| | நெத்தலி .. .. | 0 87 |
| | ஓடற்ற இறுல் கருவாடு .. | 1 12 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 0 87 |
| (2) குருவித்தை கோறளையில் உள்ள பள்ளபத்து (களத்துவாவ கிராமப் பகுதி நீங்கலாக) மெடபத்து (கரந்தானை கிராமப் பகுதி நீங்கலாக) | அறக்குளா .. .. | 1 24 |
| | கட்டா .. .. | 0 88 |
| | அஞ்சீலா .. .. | 0 71 |
| | பாரை .. .. | 1 01 |
| | கொடுவா .. .. | 0 86 |
| | சூரை .. .. | 0 96 |
| | தொண்டன் .. .. | 0 71 |
| | கும்பளா .. .. | 0 31 |
| | பொம்பிலி .. .. | 0 91 |
| | நெத்தலி .. .. | 0 86 |
| | ஓடற்ற இறுல் கருவாடு .. | 1 11 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 0 86 |
| (3) (அ) நவதுள் கோறளையிலுள்ள உடபத்து, மெட பத்து மற்றும் பள்ள பத்து, (ஆ) குக்குள் கோறளையில் உள்ள மெடபத்து | அறக்குளா .. .. | 1 26 |
| | கட்டா .. | 0 90 |
| | அஞ்சீலா .. .. | 0 73 |
| | பாரை .. .. | 1 03 |
| | கொடுவா .. .. | 0 88 |
| | சூரை .. .. | 0 98 |
| | தொண்டன் .. .. | 0 73 |
| | கும்பளா .. .. | 0 33 |
| | பொம்பிலி .. .. | 0 93 |
| | நெத்தலி .. .. | 0 88 |
| | ஓடற்ற இறுல் கருவாறு .. | 1 13 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 0 88 |
| (4) (அ) பலாங்கொடை நகராண்மைக்கழக எல்லை, (ஆ) இரக்குவானை பட்டின சபை எல்லை, (இ) குருவித்தைக் கோறளையில் உள்ள கிராம விதானைப் பகுதிகளான இறற்ஞ, கிலிமலே வடக்கு, கிலிமலே தெற்கு மற்றும் குடாவ, (ஈ) கடவத்த மெட கோறளையிலுள்ள கெலபற்ற பலாத்த, கெல உட பலாத்த, (கல்தோட்ட வாசம நீங்கலாக), மற்றும் உவேகம்பத்து, (உ) அட்டகலான் கோறளையிலுள்ள பனில் பத்து, மெடபத்து, (ஊ) குக்குள் கோறளையிலுள்ள உடபத்து மற்றும் கவகிரிய வாசம | அறக்குளா .. .. | 1 27 |
| | கட்டா .. .. | 0 91 |
| | அஞ்சீலா .. .. | 0 74 |
| | பாரை .. .. | 1 04 |
| | கொடுவா .. .. | 0 89 |
| | சூரை .. .. | 0 99 |
| | தொண்டன் .. .. | 0 74 |
| | கும்பளா .. .. | 0 34 |
| | பொம்பிலி .. .. | 0 94 |
| | நெத்தலி .. .. | 0 89 |
| | ஓடற்ற இறுல் கருவாடு .. | 1 14 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 0 89 |
| (5) (அ) கொலன்ன கோறளையிலுள்ள கொலன்னகம்பத்து மற்றும் நியபொத்தகம் பத்து, (ஆ) கடவத்தை கோறளையிலுள்ள தல்பித்தகம்பத்து, (இ) அட்டகலான் கோறளையிலுள்ள தேபத்து (பள்ளபுத்த கிராம விதானைப் பகுதி நீங்கலாக), (ஈ) மெத கோறளையிலுள்ள கல்தோட்ட வாசம | அறக்குளா .. .. | 1 28 |
| | கட்டா .. .. | 0 92 |
| | அஞ்சீலா .. .. | 0 75 |
| | பாரை .. .. | 1 05 |
| | கொடுவா .. .. | 0 90 |
| | சூரை .. .. | 1 00 |
| | தொண்டன் .. .. | 0 75 |
| | கும்பளா .. .. | 0 35 |
| | பொம்பிலி .. .. | 0 95 |
| | நெத்தலி .. .. | 0 90 |
| | ஓடற்ற இறுல் கருவாடு .. | 1 15 |
| | ஓடுள்ள இறுல் கருவாடு .. | 0 90 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது